**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 162** **நாள் : 18.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில் பருவ மழை காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நோய்த் தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில், மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில் சென்னையில் செயல்படும் தனியார் மருத்துவமனைகள், தனியார் மருத்துவர்கள் மற்றும் தனியார் ஆய்வகங்களுக்கு டெங்கு காய்ச்சல் மற்றம் பன்றிக்காய்ச்சல் நோய் தடுப்பு தொடர்பான பயிற்சி கூட்டம் மற்றும் பருவ மழை காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நோய்த் தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனை கூட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 17.10.2018 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் நோய் தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் குறிப்பாக டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக்காய்ச்சல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் (Protocols) மற்றும் தடுப்பு முறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டன.

தற்போது தட்பவெப்ப சூழ்நிலை மாறி வருவதால் பொது மக்களுக்கு காய்ச்சல், சளி, இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதுபோன்ற உபாதைகள் தொடர்ந்து இரண்டு நாட்கள் இருந்து தனியார் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய மருத்துவ சிசிச்சை முறைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். இவர்களில் யாரேனும் டெங்கு காய்ச்சல் அறிகுறியோ அல்லது உறுதி செய்யப்பட்டாலோ அவர்களை தனி வார்டில் சிகிக்சை மேற்கொண்டு, சம்மந்தப்பட்ட சுகாதார அலுவலர்களுக்கு உரிய விவரங்களை தனியார் மருத்துவமனை நிர்வாகம் கண்டிப்பாக தெரிவிக்கப்பட வேண்டும்.

பருவமழை காலங்களில், போதிய அளவு நோய் தடுப்பு மற்றும் மருந்துகள் தனியார் மருத்துவமனை நிர்வாகம் இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். நோய் தடுப்பு தொடர்பான அனைத்து உதவிகளையும் செய்திட தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது. மேலும், பருவமழை காலங்களில் பரவும் நோய்கள் தொடர்பான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழக சுகாதாரத்துறை தொடர்ந்து செய்து வருகிறது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அனைத்து விதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் நோய் தடுப்பு மற்றும் மருந்து துறை இயக்குநர் டாக்டர் குழந்தைசாமி அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மாநகர நல அலுவலர் டாக்டர் செந்தில்நாதன், மாநகராட்சி சுகதார அலுவலர்கள், தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தனியார் ஆய்வக உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**